அதே மாதிரி இன்றைக்கு 52 சதவீதம் பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால், 10 வேலைகள் இருந்தால், 10 வேலைகள் சீர்மரபினருக்கு என்று சொன்னால், அதிலே 5 வேலைகள் சீர்மரபினர் பெண்களுக்கு என்று இருக்கவேண்டும். 10 வாய்ப்புக்கள் இருக்கிறது கல்லூரியிலே இடம், அது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று சொன்னால், அதிலே 5 பெண்களுக்கு என்று இருக்கவேண்டும். ஏன் என்றால், பாப்புலேசனிலே பெண்கள் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். ஆண் ஜாதியைவிட பெண் ஜாதிதான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்த உரிய வாய்ப்புக்கள் தரப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது, பள்ளித் தேர்வு முடிவுகளை எல்லாம் நாம் பார்க்கிறபோது, ஆண்களை விட பெண்கள்தான் அதிகமாக மார்க்குகள் வாங்கி தேர்வு பெறுகிறார்கள். ஆகவே சீர்மரபினராக இருந்தாலும், மிகவும்பிற்படுத்தபட்ட வகுப்பினராக இருந்தாலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருந்தாலும், யாராக இருந்தாலும், மார்க்கின் அடிப்படையிலேதான் அந்த இடங்களைத் தருகிறோம். ஆகவே பெண்களுக்கு உரிய வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய நிலைதான் இன்றைக்கும் ஏற்பட்டு இருக்கிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. என்ன இருந்தாலும், ஒரு ஆங்கிலப் பழமொழி இருக்கிறது. If you educate a man "man alone is educated Edu/ating a woman is equal to educating the whole family"

சொல்லப்பட்டு இருக்கிறது. ஒரு ஆண் கல்வி கற்றால் அந்த ஆண் மட்டும்தான் கல்வி கற்கிறான். ஆனால் ஒரு பெண்ணைப் பயிற்றுவிக்கிறபோது, அந்தக் குடும்பமே பயிற்றுவிக்கப்படுவதாக ஆக்கப்படுகிறது. வரதட்சிணைக் கொடுமை என்று பல இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் ஒரு பெண் கல்வியை கற்று வருவாளேயானால், அந்தக் குடும்பமே, இந்தச் சமுதாயமே உயர்வு அடைய வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையில் தான் இந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஆகவே சமதர்மசமுதாயத்தை உருவாக்குவது நமது குறிக்கோள் என்கிற இந்த அரசைப் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

7. விதி 110—இன் கீழ் வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை.

குடிநீர்ப் பற்றாக் குறையைப் போக்கும் பணிகள் மற்றும் வறட்சி நிவாரண நடவடிக்கைகள் குறித்து.

1992 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அவையிலே ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பருவமழை பாதித்ததினால், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 11–3–1992 அன்று, 9.72 கோடி பணம் கொடுக்கவேண்டும் என்று உத்தர விட்டு இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் 1,500 ஆழ் குழாய்க் கிணறுகளும், அதற்கு என்று 4.75 கோடி ரூபாயும் பல்வேறு குடிநீர்ப் பணிகளுக்கு 1.97 கோடியும், வேலை வாய்ப்புப் பணிகளுக்காக 3 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆக, மொத்தம் இந்த அடிப்படையில், 9.72 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல், இந்தப் பணத்தை ஒதுக்குவதில், மத்திய அரசின் அறிவிப்புப்படி 1-4-1990 முதல் மாநில அளவில் இயற்கைச் சீற்றத் தணிப்பு நிதி (Calamity Relief Fund) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பிற்பகல் 12.05

ஒவ்வொரு ஆண்டும் இந்த நிதிக்காக ரூ. 39 கோடி அளிக்கப்படுகிறது. இந்தத் தொகுதியில் 75 விழுக்காடு மத்திய அரசாலும், 25 விழுக்காடு மாநில அரசாலும் வழங்கப் படுகிறது. இந்த நிதியை நிர்ணயிப்பதற்காக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு மாநிலக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் வருவாய்த் துறைச் செயலாளர், செயலாளராகவும், நிதி, பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல், வேளாண்மைத் துறை செயலாளர்கள் மற்றும் வருவாய் ஆணையாளர் முதலியோர் உறுப்பினர்களாகவும் இருக் கிறார்கள். 1990-ஆம் ஆண்டு தென் மேற்கு மற்றும் வட கிழக்குப் பருவ மழை தவறி விட்டதினால் கோயம்புத்தூர், தர்மபுரி, திண்டுக்கல் காயிதே மில்லத், கன்னியாகுமரி, மதுரை, உதகமண்டலம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், பெரியார், சேலம், திருநெல்வேலி—கட்டபொம்மன், திருவண்ணாமலை சம்புவராயர் வட ஆற்காடு அம்பேத்கார், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன தலைமைச் செயலாளர் தலைமையில் பல்வேறு கட்டங்களிலே மாநிலக் குழு ஆய்வு செய்து 30—11—1991 முடிய வறட்சி

நிவாரணப் பணிக்காக ரூ. 8.69 கோடி வழங்கியது. இதன் காரணமாக மாநிலம் பூராவும் 1,813 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. 1991—ஆம் ஆண்டு தென் மேற்கு மற்றும் வட கிழக்குப் பருவ மழையினால் ஓரளவு மழை வந்தபோதிலும் கோயம்புத்தூர், காமராஜர், புதுக்கோட்டை, இராமநாத புரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை மற்றும் திண்டுக்கல், அண்ணா மாவட்-டங்களில் போதிய அளவு மழை பெய்யவில்லை. மேற்கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து வறட்சி நிவாரணம் கோரி அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மூன்று அமைச்சர்களும் 6—3—1992—ல் வருவாய்த் துறைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறைச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வேளாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் சிறப்பு ஆணையாளர், வருவாய் நிர்வாக சிறப்பு ஆணையாளர் ஆகியோர் ஆராய்ந்து மேற் கூறிய மாவட்டங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், பல்வேறு குடிநீர்ப் பணிகளுக்காகவும் இந்தப் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1991—92 ஆம் ஆண்டு அதாவது சென்ற ஆண்டிற்கு, சீற்றம் தணிப்பு நிதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை நான் முதலிலே தெரிவித்தபடி மத்திய—மாநில அரசின் மூலமாக ரூ. 39 கோடி 1992-ல் கீழ்க்கண்டவாறு சீற்றங்களுக்காக ஒதுக்கப்பட்டது.

மத்திய —மாநில அரசால் ஒதுக்கப்பட்டது ரூ. 39 கோடி. வெள்ள நிவாரணத்திற்காக ரூ. 36 கோடி, வறட்சி நிவாரணத் திற்காக ரூ. 15.49 கோடி. ஆக ரூ. 51.49 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஒதுக்கிய நிதியை விட தமிழக அரசு ரூ. 12.49 கோடி அதிகமாக செலவிட்டிருக்கிறது. இதன் மூலமாக தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவியி னுடைய அரசு ஏழை எளிய மக்களின் துயர் துடைப்பதற்காக அதன் அடிப்படையில் தேவையான நிதி இல்லையென்றாலும், அவர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்பதற்காக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்காக போன ஆண்டு ரூ. 12.41 கோடி அதிகமாக செலவழித்திருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS